**MOSM/15**

**Sl. No. : 10000493**

பதிவு எண் | | | | | | | | | |

# 2015

# சித்த மருத்துவம்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் விடுபடாமல் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதேனும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும், சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக்காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வு பாடக் குறியீடு மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றை விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விவரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

⇆

SPACE FOR ROUGH WORK

www.tnpscwinners.com

1. தேச காலங்களில் பொருந்திய பொருட்கள் எல்லாவற்றையும் இருந்த இடத்தில் அறிவது

(A) திரிபுக் காட்சி
(B) தன்வேதனைக் காட்சி
(C) யோகக் காட்சி
(D) மானதக் காட்சி

2. .... உண்டிவினை இன்மையின் உணர்ந்த உணர்தலின்

மாயா இயந்திர தனுபினுள் ஆன்மா'', என்று உயிரை ஒரு தனிப்பொருளாக உணர்த்துவது

(A) திருமந்திரம்
(B) திருபாசகம்
(C) சிவஞானபோதம்
(D) நீலகேசி

3. தோற்றக் கிரமத்தில் கூறப்பட்ட வாதங்களில் "சுக்கிர சுரோணிதங்கள், பஞ்ச பூதங்கள், பஞ்ச கோசங்கள் மற்றும் இந்திரியங்கள், பஞ்ச வாயுக்கள். இவற்றின் கூட்டம் – ஆன்மா" – என கூறுவது எவ்வகை வாதம்?

(A) இந்திரியான்மா வாதம்
(B) பிராணான்ம வாதம்
(C) பிரமாத்தும வாதம்
(D) சமுச்சயான்ம வாதம்

4. "நிகோதா இந்திரியாத்மா" இவற்றின் ஆயுள் காலம் எவ்வளவு?

(A) ஒரு நாடித் துடிப்பு நேரம்
(B) ஒரு நாள்
(C) ஒரு வருடம்
(D) பத்து ஆண்டுகள்

5. பர நாதத்திலிருந்து தோன்றும் ஐவகை கலைகளான (நீக்கீ, நிலைப்பி, நுகர்வி, அமைப்பி, அழுத்தி) முதலியன எந்த ஆதித்தனின் கீழ் உண்டாகிறது?

(A) சிவ ஆதித்தன்
(B) ஞானாதித்தன்
(C) மனவாதித்தன்
(D) பிண்டாதித்தன்

6. பதியும், மீநிறைவு என்பதும் ஒன்றினுள் ஒன்று அடங்கி இருக்கும் நிலை என்ன?

(A) வியாபகம்
(B) வியாப்தி
(C) வியாப்பியம்
(D) நிறைவு



www.tnpscwinners.com

7. சென்னாவில் அடங்கியுள்ள முக்கியமான வேதிப்பொருள்

(A) இண்டோல் அல்கலாய்டு
(B) டிரைடெர்பினாய்டு சாப்போனின்
(C) சைட்டோஸ்டீரால்
(D) ஆந்த்ரகுயினோன் கிளைக்கோசைடு

8. கீழ்காண்பவற்றுள் தசமூலங்களில் ஒன்றான மூலிகை எது?

(A) பெருங்குமிழ்
(B) ஆதொண்டை
(C) அதிமதுரம்
(D) முட்சங்கன்

9. அதிவிடயத்திற்கு மாற்று மருந்தாகப் பயன்படும் தாவரம்

(A) கிரிப்டோஸ்டீஜியா கிராண்டிஃபுளோரா
(B) கோலியஸ் ஃபோர்ஸ்கோலை
(C) கால்சிகம் ஆட்டம்னேல்
(D) கிரிப்டோகாரைன் ஸ்பைராலிஸ்

10. பருத்த கனுப்பகுதியால் இனம் கண்டறியப்படும் குடும்பம்

(A) ஃபேபேசி
(B) ரூபியேசி
(C) லாமியேசி
(D) அக்காந்தேசி

11. 'சாரஸ்' என்பது

(A) சடைக் கஞ்சா
(B) கஞ்சாவின் இளங்குருத்து
(C) இனிப்புச் சுவை சேர்ந்த கஞ்சா
(D) கஞ்சா ரெசின்

12. இருவியின் மருத்துவச் செயல்

(A) கருப்பை உரமாக்கி
(B) சிறுநீர் பெருக்கி
(C) வயிற்றுப் புழுக்கொல்லி
(D) காமம் பெருக்கி

13. TCA சுழற்சிக்கு தேவையான நொதிகள் அடங்கியுள்ள இடம்

(A) சைட்டோசோமல் பகுதி

(B) சைட்டோசோமல் மற்றும் மைட்டோ காண்டிரியா

(C) மைட்டோகாண்டிரியல் மாட்ரிக்ஸ்

(D) மைட்டோகாண்டிரியா

14. கொழுப்புகளின் வகைப்பாட்டில் பிற கூட்டு கொழுப்புகளுக்கு உதாரணம்

(A) அமினோ கொழுப்புகள்
(B) புரத கொழுப்புகள்
(C) ஸ்பின்கோ பாஸ்போ கொழுப்புகள்
(D) கிளிசரோ பாஸ்போ கொழுப்புகள்

15. 1 புளூரோ 2, 4-டை நைட்ரோபென்சீன் என்பது -

(A) சான்கர்ஸ் ரியேஜண்ட்
(B) எட்மான்ஸ் ரியேஜண்ட்
(C) ரூமான்ஸ் பர்பிள்
(D) பெனிடிக்ஸ் ரியேஜண்ட்

16. ஆடுதீண்டாப்பாளையினை அரைத்து தேங்காயளவு எடுத்து ஒருபடி நல்லெண்ணெயில் காய்ச்சி ஐந்தைந்து நாட்களாக 40 நாட்கள் கொடுத்துவர நீங்கும் நோய் எது?

(A) படர்தாமரை
(B) சூதகக்கட்டு
(C) சோரியாஸிஸ் என்னும் காணஞ்சதல்டை
(D) பெருநோய்தடிப்பு

17. அறுகம்புல்லின் சாற்றினை வெள்ளிக்கிழமைகளில் குடித்து வர எந்த நோய் குணமாகும் என புலிப்பாணி – 500 ல் கூறப்பட்டுள்ளது?

(A) காணாக்கடி விடம்
(B) பெருச்சாளி விடம்
(C) சொறி, சிரங்கு
(D) நாய்க்கடி விடம்

18. "கோரக்" என்று வேறு பெயரும் உள்ள மரத்தின் பெயர் என்ன?

(A) கஞ்சா
(B) சிறுதேக்கு
(C) ஆனைப்புளியமரம்
(D) ஆற்றுத்துமட்டி

19. இதனுடைய எண்ணெயை ஆங்கில மொழியில் Domba Oil என்று சொல்வார்கள் என குணபாடம் மூலிகை நூல் கூறுகிறது

(A) வாதுமை

(B) புன்னை

(C) புத்திரசீவி

(D) மருள்

20. வயது முதிர்ந்தவர் பற்களும் இளைஞர் பற்கள் போன்று உறதிபெற கொப்பளிக்க வேண்டிய குடிநீராக தேரன் வெண்பா கூறும் குடிநீர் – என குணபாடம் மூலிகை நூல் கூறுவது

(A) சத்திச்சாரணை குடிநீர்

(B) தக்கோலப்பொட்டு குடிநீர்

(C) தேற்றான் விதைக் குடிநீர்

(D) மருக்காரைக் குடிநீர்

21. நீர், மண் பூத உறுப்புகளில் தோன்றும் நோய்களை தீர்க்க வல்ல பஞ்ச சூத சரக்கு எது?

(A) ரச செந்தூரம்

(B) ரச கற்பூரம்

(C) வீரம்

(D) லிங்கம்

22. அன்னபேதியுடன் கரியபோளம் சேர்ந்த மருந்துகள் எந்நோய்களில் வழங்கல் படுகின்றன?

(A) சூதக கட்டு, சூதக ஒழுக்கு, வெள்ளை

(B) பாண்டு, பெருவயிறு, காமாலை

(C) சீதபேதி, வன்மை குறைவு

(D) காய்ச்சல், முறைசுரம்

23. கந்தக சுத்திக்கு எக்கற்கம் உபயோகமாகிறது?

(A) ஆபிதோடை கற்கம்

(B) கரிசாலை கற்கம்

(C) வெற்றிலை கற்கம்

(D) மருதோன்றி கற்கம்

24. குற்றமற்ற ரசத்துடன் எவை எவை சம அளவில் சேர்வதால் தங்கமும், வெள்ளியும் உண்டாகும்?

(A) செம்பும், கந்தியும்

(B) கந்தியும்; தாளகமும்

(C) காரீயமும்; கந்தியும்

(D) வெள்ளியமும்; தாளகமும்

www.tnpscwinners.com

25. பலகறைச் செந்தூரத்தினை எந்த துணை மருந்துடன் கொள்ள உருத்திரவாயு குணமாகும்?

(A) ஆத்திச் சாறு

(B) தும்பைச் சாறு

(C) வெள்ளுள்ளிச் சாறு

(D) ஆனைக்காஞ்சொறிச் சாறு

26. நல்ல அட்டையில் செங்கழுநீர் நிறத்தினைப் பெற்ற அட்டை எந்த வகுப்பினைச் சார்ந்தது

(A) முதல் வகுப்பு

(B) இரண்டாம் வகுப்பு

(C) மூன்றாம் வகுப்பு

(D) நான்காம் வகுப்பு

27. நந்தீசர் கலைஞானத்தில் பஞ்சபூதபாடாணத்தில் இலிங்கம் எந்த பூதத்தின் தன்மையுடையது எனக் கூறப்பட்டுள்ளது?

(A) ஆகாயம்

(B) வாயு

(C) தேயு

(D) அப்பு

28. சுத்தித்த தந்தத்தினை தூதுவேளை சமூலச்சாறு விட்டு அரைத்து புடமிட்டப் பெண் குதிரைப் பல்லின் பற்பத்தினை எந்த நோய்க்கு வழங்கலாம்?

(A) அதிசாரநோய்

(B) நீரிழிவு நோய்

(C) குட்ட நோய்

(D) இருமல் நோய்

29. துத்தநாகத்தின் பகைச் சரக்கு எது?

(A) மிளகு

(B) இரும்பு

(C) காந்தம்

(D) காரீயம்

30. I. தாளகக் கருப்பில் சேரும் சீவப்பொருள் யாது?

II. எந்நோய்க்கு வழங்கப்படுகிறது?

(A) ஆமை சதை, விடாசுரம்

(B) நத்தை சதை, சுவாசகாசம்

(C) நண்டு சாறு, இருமல்

(D) உடும்பு சாறு, மூலம்

31. பெரும்பீர்க்கு, வெள்ளரி, கோவை இவைகளின் சாற்றினைத் தனித்தனியாக அரைத்துப் புடமிட்ட பற்பம் எது?

(A) நாக பற்பம்

(B) தாளக பற்பம்

(C) வெள்வங்க பற்பம்

(D) வெள்ளி பற்பம்

32. அண்ட எருக்கன் செயநீர் செய்வதற்கு எருக்கின் பால், முட்டை வெண்கருவுடன் எத்தனை நாட்கள் கழித்து வீரம் / சிட்டிகை சேர்க்க அது செயநீராகும்?

(A) 4 நாட்கள்

(B) 5 நாட்கள்

(C) 6 நாட்கள்

(D) 3 நாட்கள்

33. இந்துப்பின் செய்கை மற்றும் பூதக் கூறு யாது?

(A) மலகாரி, அகட்டுவாய்வகற்றி மற்றும் மண் பூதம்

(B) வீக்கமுறுக்கி, வியர்வையுண்டாக்கி மற்றும் நீர் பூதம்

(C) இசிவகற்றி, சுரமகற்றி மற்றும் தீ கூறு

(D) வியர்வை பெருக்கி, சுதகமுண்டாக்கி மற்றும் வாயு பூதம்

34. முகத்தின் பல பகுதிகளிலுமிருந்து உதடுகளை நோக்கி வருகின்ற பேசிகளெல்லாவற்றிற்கும் எதிர்ப்பேசி

(A) புருரி

(B) தமனி

(C) லபனி

(D) கேநாரி

35. தாடைக்கீழ்க் கோளத்தின் குழலின் பெயர் –

(A) பதொலின் தாரை

(B) ஸ்தேனு தாரை

(C) வாட்டனர் தாரை

(D) நாசிப் புரை

36. முன்பின் இரத்தினி நாளங்கள் சந்தித்து உண்டாகும் பரும் நாளம்

(A) சிவலி நாளம்

(B) பசிலி நாளம்

(C) மத்திய நாளம்

(D) ஆரை நாளம்

37. முற் பக்கத்தில் குறுக்குக் கமரும், வலப் பக்கத்தில் குகா நாளக் கமரும், இடப் பக்கத்தில் நாளசரக் கமரும் எல்லைகளாக கொண்ட ஈரலின் இதழ்

(A) ஸ்பிகெலிதழ்

(B) நொய்யிதழ்

(C) சதுரிதழ்

(D) இடவிதழ்

38. பின்கண்ட என்புகளில் எது செவியென்பு தொகுப்பில் சேராது?

(A) முட்கர என்பு

(B) சூர்மி என்பு

(C) வேதிக என்பு

(D) அசுரு என்பு

www.tnpscwinners.com

39. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி

கூற்று A : முதியோரில் புரஸ்தகோளம் சிலவேளை பருப்பதால் சிறுநீர் கழிவதற்கு தடங்கலாகும்.

காரணம் R : புரஸ்தகோளத்தின் பக்க இதழ் பருப்பதால் ஏற்படுகிறது.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி

(B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

40. வள்ளைக் கீரை ஒரு வகை

(A) தரைபடர் தாவரம்

(B) ஏறு கொடி தாவரம்

(C) சதுப்பு நிலத் தாவரம்

(D) நீர் வாழ்த் தாவரம்

41. ஒரு கிராம் அயச் செந்தவளத்துள் சேரக் கூடிய உயிர் வாயுவின் அளவு எவ்வளவு?

(A) 1.14 மி.லி.

(B) 1.24 மி.லி.

(C) 1.34 மி.லி.

(D) 1.44 மி.லி.

42. கீழ்க்கண்ட பிரிவுகளில் அவைதிகர் பிரிவைச் சாராதவர்கள் யார்?

(A) பௌத்தர்

(B) உலகாயதர்

(C) நையாயிகர்

(D) சமணர்

43. அகத்தே பயிலப் பெறும் இன்னோசை எத்தனை வகைப்படும்?

(A) ஒன்பது

(B) பத்து

(C) பன்னிரண்டு

(D) பதின்மூன்று

www.tnpscwinners.com

44. பட்டியல் I-ல் குறிப்பிட்டுள்ள பூதங்கள் பட்டியல் II-ல் உள்ள எந்த சுவையை உணவாகக் கொண்டு வேலை செய்கின்றன என்பதைப் பொருத்துக

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | வாயு | 1. | கார்ப்பு |
| (b) | தீ | 2. | துவர்ப்பு |
| (c) | நீர் | 3. | கைப்பு |
| (d) | ஆகாயம் | 4. | இனிப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

45. விசுத்தியின் வீடு

(A) அனாகதத்திற்கு மேல் ஆறு அங்குலத்தில் இருப்பது

(B) அனாகதத்திற்கு மேல் எட்டு அங்குலத்தில் இருப்பது

(C) அனாகதத்திற்கு மேல் பத்து அங்குலத்தில் இருப்பது

(D) அனாகதத்திற்கு மேல் பன்னிரண்டங்குலத்தில் இருப்பது

46. உடல் குருதியில் பிராணவாயுவின் அளவு

(A) 14 முதல் 16 விழுக்காடு

(B) 18 முதல் 21 விழுக்காடு

(C) 20 முதல் 24 விழுக்காடு

(D) 26 முதல் 30 விழுக்காடு

47. கீழ்க்கண்டவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அழகிய போர்வை | 1. | நடப்பாற்றல் |
| (b) | கண் | 2. | வனப்பாற்றல் |
| (c) | தலை | 3. | அன்பாற்றல் |
| (d) | தலை முடி | 4. | தொழிலாற்றல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |



www.tnpscwinners.com

48. கொழுப்பு சத்து அதிகமுள்ள தானியம் எது?

(A) கேழ்வரகு
(B) சோளம்
(C) கம்பு
(D) வரகு

49. நீராமைக் கட்டியை நீக்குவது?

(A) மூங்கிற்பாய்
(B) தாழம்பாய்
(C) கோரைப்பாய்
(D) பிரப்பம்பாய்

50. முளை மூலம் நிவர்த்தியாவது எது?

(A) கீரைத் தண்டு
(B) வாழைத் தண்டு
(C) பிரண்டைத் தண்டு
(D) கருணைத் தண்டு

51. எந்த மீன்கறியில் நீரிழிவு நோய் விருத்தியாகும்?

(A) கற்றாளை மீன்கறி
(B) கருவெளவால் மீன்கறி
(C) வெள்ளை வெளவால் மீன்கறி
(D) சுறா மீன்

52. சிறுகுளங்களின் கரையில் வளக்கப்பட்ட மூலிகை மரங்கள் யாவை?

(A) தேற்றான் கொட்டை, நெல்லி, மருது
(B) கடுக்காய், நெல்லி, தான்றி
(C) பூவரசு, வேம்பு, நெல்லி
(D) தான்றி, வேம்பு, பூவரசு

53. மேகரோகம், மகாரோகம் நீரில் உதிரம் காணப்படும் என்று கூறும் நூல்

(A) மாதவ கற்பம்
(B) சித்திய வித்தியாதரம்
(C) கௌதமர் நூல்
(D) நித்திய நாதீயம்

54. தாயிடமிருந்து சிசுவிற்கு அன்னசாரம் என்னும் அன்ன சத்து இதன் மூலமாகவே செல்லுகிறது

(A) நிணநீர்
(B) பனிநீர்
(C) இரத்தம்
(D) சிரசு

55. முள் முருக்கம் பூப்போன்று சிவந்த நிறமுள்ள மலம் எந்த சுரத்தில் உண்டாகும்?

(A) வாயுவாலுண்டான சுரம்
(B) பித்தத்தாலுண்டான சுரம்
(C) சீதளத்தாலுண்டான சுரம்
(D) வாதக சுரம்

56. தேரையர் யமகத்தில் மெய் சாமள நிறமும், மினு மினுப்பும் காணில் எத்தனையாவது திங்களில் உயிர் நீங்கும்?

(A) ஆறு திங்கள்
(B) ஏழு திங்கள்
(C) எட்டு திங்கள்
(D) ஒன்பது திங்கள்

57. சங்கிரகக் கிராணி எனப்படும் நிணக்கழிச்சல் எது?

(A) குன்ம நிணக்கழிச்சல்
(B) ஒட்டு நிணக்கழிச்சல்
(C) எரிச்சல் நிணக்கழிச்சல்
(D) வளி நிணக்கழிச்சல்

58. தலை முடியின் நிறத்தை ஒத்திருக்கும் நீரின் நிறம் எந்த நோயாளியுடையது?

(A) ஈரல் சுரம்
(B) இதய நோய்
(C) கல்லடைப்பு
(D) சுரநோய்

59. சதாசிவப் பஞ்சீகரணத்தின் படி தேயுவினை நிறுத்தி மறுபாதியை 4 பங்காக்கி, மீதமுள்ள 4 பூதங்களுக்கும் எந்நிலை கொடுக்கப்பட்டது?

(A) அவகாசம்
(B) சலனம்
(C) உஷ்ணம்
(D) திரவகம்

60. கருவளர்ச்சியில் மலசல துவாரங்கள், எத்தனையாவது திங்களில் உண்டாகும் என அகத்தியர் கூறியுள்ளார்?

(A) நான்கு திங்கள்
(B) ஐந்து திங்கள்
(C) ஆறு திங்கள்
(D) ஏழு திங்கள்

61. ரிபோபிளேவின் குறைபாட்டை கண்டறிய எந்த நொதியை கண்டறியலாம்

(A) குளூட்டாதையோன் ஆக்சிடேஸ்
(B) குளூட்டாதையோன் ரிடக்டேஸ்
(C) குளூட்டாதையோன் பெர் ஆக்சிடேஸ்
(D) L – அமினோ அமில ஆக்சிடேஸ்

www.tnpscwinners.com

62. வன்புணர்ச்சி அல்லது அச்செயலுக்கு முனைதல் எந்த பிரிவின் கீழ் குற்றமாகக் கருதப்படுகிறது?

(A) இந்திய தண்டனைச் சட்டம் 375 (Sec 375. I.P.C)

(B) இந்திய தண்டனைச் சட்டம் 376 (Sec 376. I.P.C)

(C) இந்திய சான்றுகள் சட்டம் 376 (Sec 376. I.E.A)

(D) இந்திய தண்டனைச் சட்டம் 377 (Sec 377. I.P.C)

63. 'பாஸ்பரம்' என்னும் நஞ்சினை உண்டவரின் பிணநிற மாறுபாடானது எப்படி இருக்கும்?

(A) கரும்பழுப்பு நிறத்தில் இருக்கும்

(B) சாக்லேட் நிறத்தில் இருக்கும்

(C) மஞ்சள் நிறத்தில் இருக்கும்

(D) சிவப்பு நிறத்தில் இருக்கும்

64. நல்ல தண்ணீரில் மூழ்கி இறந்தவரின் குருதியின் நிலை

(A) நீர்த்துவமடைந்திருக்கும்

(B) குருதி அடர்த்தி அடைந்திருக்கும்

(C) எவ்வித மாற்றம் இருக்காது

(D) குருதி அழுத்தம் அதிகரிக்கும்

65. பச்சைகுத்துதலில், பச்சைநிற ஓவியத்தை உருவாக்க உபயோகப்படுத்தப்படும் பொருள்

(A) சைனா மை

(B) இந்திய மை

(C) குரோமிக் ஆக்ஸைடு

(D) நைட்ரிக் ஆக்ஸைடு

66. சாராயம் உட்கொண்டு இறந்தவரின் உடல் உறுப்புகளை வேதியியல் ஆய்விற்கு அனுப்பும்பொழுது கண்டிப்பாக சேர்க்கக் கூடாத கரைசல் (Preservative)

(A) நீர் மட்டும்

(B) சோற்றுப்பு மட்டும்

(C) சோற்றுப்புக் கரைசல்

(D) ஸ்பிரிட்

67. அகத்தியர் குழம்பினை ஒரு உச்சிக் கரண்டி அளவு எந்த மூலிகைச் சாற்றுடன் வழங்க வாந்தி, கழிச்சல் உண்டாகி சூலைநோய் குணமாகும்?

(A) குப்பைமேனிச் சாறு
(B) வரிகுமட்டிக்காய் சாறு
(C) பப்பாளிக்காய் சாறு
(D) உத்தாமணிச் சாறு

68. பொருத்துக : ஐய சுரத்திற்கு கீழ்கண்ட மருந்துகளை எந்தெந்த அனுபானத்தில் வழங்க சுரம் தீரும்?

(a) காந்த செந்தூரம் — 1. பசுவின் மோர்
(b) பலகரைச் செந்தூரம் — 2. சீந்தில் இலைச்சாறு
(c) வங்க செந்தூரம் — 3. பசு நெய்
(d) வெள்ளிச் செந்தூரம் — 4. கற்கண்டு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

69. வயிற்றில் கட்டிகள் தோன்றி, உடல் மஞ்சளித்து உடற்கட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக குன்றாது, ஐம்பொறிகளையும் கலங்கச் செய்யும் பெருவயிறு எது?

(A) மண் ஈரல் பெருவயிறு
(B) சுரப் பெருவயிறு
(C) நீர் பெருவயிறு
(D) சதை பெருவயிறு

70. சூல் கொண்ட பெண்களுக்கு மூன்று தினங்களுக்குள் வளிகுற்றம் மிகுந்து, கருவாயிலிருந்து குருதி வெளியாகி வயிறு சுருங்கி, உடல் முழுமையும் வெப்பமடைந்து மிகுந்த சினத்தினை உண்டாக்கும் வாதம் எது?

(A) குணவ வதானகம்
(B) கண்டக அவதானகம்
(C) சிரக்கம்ப அவதானகம்
(D) உதிரவாத சுரோணிதம்

71. வளி ஐயக் கீல்வாயுவிற்கு சிறப்பு மருத்துவமாக தரும் காளமேக நாராயண செந்தூரத்தின் அளவு எவ்வளவு?

(A) ஒரு உந்தளவு
(B) இரண்டு உந்தளவு
(C) மூன்று உந்தளவு
(D) நான்கு உந்தளவு

72. "சிறு சுரம், அடிவயிற்றில் வலி, நீர் எரிச்சல், சிறுநீர் அளவில் குறைந்து, செந்நிறத்தில் வெளியாதல், சில வேளையில் வாய் குமட்டல், வாந்தி, வாந்தியுடன் குருதி வெளிப்படல்" – இக்குறிகுணங்கள் கொண்ட நோயின் கணிப்பு கீழ்கண்டவற்றுள் எது?

(A) மேல் நோக்கு குருதியழல் நோய்
(B) கீழ்நோக்கு குருதியழல் நோய்
(C) இரு நோக்கு குருதியழல் நோய்
(D) அளவில்லா நோக்கு குருதியழல் நோய்

73. ஆகாந்துவ நோய்க்கான மருத்துவம் யாது?

(A) கழிச்சல் ஏற்படுத்துதல்
(B) வாந்தியுடன் கழிச்சல் ஏற்படுத்துதல்
(C) மந்திரம், தந்திரம் செய்தல்
(D) பிராணயாமம் செய்தல்

74. கீழ்கண்டவாக்கியங்களை கவனி

கூற்று (A) : தாபிதம் என்பது உடலில் ஏற்படும் வீக்கமாகும், சிலவேளை தாபிதம் கட்டி கழலைகளாக மாறும்.

காரணம் (R) : உடலில் ஊறு ஏற்பட்ட இடத்தில் இரத்தம் அதிகமாகப் பரவுவதால் வீக்கம், சிவத்தல், வெப்பம் ஆகியன ஏற்படுகின்றன.

(A) (A) சரி ஆனால் (R) தவறு
(B) (A) தவறு ஆனால் (R) சரி
(C) (A) மற்றும் (R) இரண்டும் சரி
(D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

75. கர்ப்பிணிக்கு கொடுக்கக் கூடாத கீரை எது?

(A) முருங்கை கீரை
(B) அகத்திக் கீரை
(C) வல்லாரைக் கீரை
(D) தண்டங்கீரை

76. கறிமலை வேம்பு எனப்படும் கற்பம் எது?

(A) வேம்பு
(B) ஆலம்பால்
(C) ஆல்
(D) ஆயில்பட்டை

77. பேரண்டப் பொடியை எந்த அனுபானத்தில் எச்சில் கிரிகை நோய்க்குக் கொடுக்க வேண்டும்?

(A) பால்

(B) தேன்

(C) ஆமணக்கெண்ணெய்

(D) கழுதைப் பால்

78. வாத பிரமைக்கு கந்தக பற்பத்தின் அனுபானம் என்ன?

(A) இலவங்க பட்டை + இஞ்சிச் சாறு + தேன்

(B) இலவங்க ரசம் + இஞ்சிச் சாறு + தேன்

(C) இலவங்க ரசம் + வெற்றிலை சாறு + தேன்

(D) இலவங்க ரசம் + வல்லாரை சாறு + தேன்

79. "உண்ட நீர் உனக்குள் பாய்ந்திடில்" கூறியது யார்?

(A) திருமூலர்

(B) ஞான வெட்டியான்

(C) திருமந்திர பாடல்

(D) திருக்குறள்

80. எவ்வகையான மத அழிவு நோயில் கன்னமும், கண்ணும் சிவப்பாக இருக்கும்?

(A) ஐய மத அழிவு

(B) வலிமத அழிவு

(C) முக்குற்ற மத அழிவு

(D) அழல் மத அழிவு

81. வில்வ வேரும், வெங்காயமும் எந்த வர்மத்திற்குக் கஞ்சியாகக் கொடுக்கப்படுகிறது

(A) மூத்திர காலம்

(B) அடப்ப காலம்

(C) அலரி வர்மம்

(D) சுழி ஆடிவர்மம்

82. குட்ட நோயில் துருசு செந்தூரம் அனுபானம் என்ன?

(A) தேன் அல்லது பால்

(B) வெண்ணெய் அல்லது நெய்

(C) அமுக்ரா லேகியம் (அல்லது) சர்க்கரை

(D) தேன் அல்லது தேத்தான் லேகியம்

83. கண் தானாக தூங்குவது போல தோன்றும் கரப்பான் எது?

(A) பித்தக் கரப்பான்

(B) கபாலக் கரப்பான்

(C) திமிர் வாதக்கரப்பான்

(D) கண்டக் கரப்பான்

www.tnpscwinners.com

84. இருநிறம் அல்லது செந்நிறம் பொருந்திய பருக்கள் ஆண்குறியில் தோன்றி, தாங்க முடியாத வலியை உண்டாக்கும் ஆண்குறி நோய் எது?

(A) பரவு கட்டிப் புண்

(B) கரு மருள் திரட்சிப் புண்

(C) நெருக்குக் கிரந்தி

(D) செந்நிறக் கொப்புளம்

85. நாரிக் கேளத் தைலத்தை காதில் விட்டும், மேலே பூசுவதற்கும் செய்யும் நோய் எது?

(A) செவி விப்புருதி

(B) செவிச் சன்னி

(C) செவிச் சூலை

(D) செவி வளி

86. கண் விழியில் மாச மூடி கண்ணை மறைத்து, கண் முற்றிலும் அரிக்கும், பார்வை பாசிநிறம் போல் சந்து பச்சையாய் இருந்து, பீளை சார்தல், நீர் வடிதல் குறிகுணங்களை உடைய கண்ணோய் எது?

(A) அழற்றி

(B) கூசி விழித்தல்

(C) பொங்கிய விதனம்

(D) புத்தி அழித்தல்

87. காதில் அதிகமாகச் சீழ் இருக்கும் போது விடும் மருந்து எது?

(A) விஷ மூங்கிலிலைச் சாறு

(B) முசுமுசுக்கைச் சாறு

(C) பூண்டுச் சாறு

(D) நாய் வேளைச் சாறு

88. பேய்புடல் சேர்ந்த குடிநீர் எந்த வகையான புண்களை கழுவ பயன்படுகிறது?

(A) வளிப்புண்

(B) அழற் புண்

(C) ஐய புண்

(D) அழல் ஐய புண்

89. ஊன் பூச்சுத் தைலத்தில் சேராத சரக்கு எது?

(A) ஊது சங்கம்

(B) துருசு

(C) எள்ளுக்காய் தோல்

(D) செந்நாயுருவி சமூலம்

www.tnpscwinners.com

90. பட்டியல் I கூறிய கொருக்கு நோய் வகைகளுடன் பட்டியல் II கூறிய குறிகுணங்களை பொருத்தி ஒப்பிடுக

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | வளிக் கொருக்கு நோய் | 1. | ஆண்குறி பருத்திருக்கும் |
| (b) | ஐய கொருக்கு நோய் | 2. | நீர்புடை வறண்டு காணும் |
| (c) | முக்குற்ற கொருக்கு நோய் | 3. | ஆண்குறி தடித்திருக்கும் |
| (d) | குருதி கொருக்கு நோய் | 4. | அண்ட வீக்கம் காணும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

91. அறுவை மருத்துவத்தில் கூறப்பட்ட பட்டியல் I – ல் உள்ள நோய்களை பட்டியல் II – ல் மருந்துகளுடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க

| | பட்டியல் I<br>நோய் | | பட்டியல் II<br>மருந்துகள் |
|---|---|---|---|
| (a) | சீழ்ச்சன்னி | 1. | வசம்புத் தைலம் |
| (b) | குருதிச் சன்னி | 2. | திரிகடுகாதி நிம்பத் தைலம் |
| (c) | நீர்ச்சன்னி | 3. | இலசுனாதி நிம்பத் தைலம் |
| (d) | வளிச்சன்னி | 4. | வசுவாதித் தைலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

92. குழந்தைகளில் எந்த வகையான வயிற்று புழு நோயில் கொப்பூழ் மலர்ந்து காணப்படும்?

(A) கீரிப் பூச்சி
(B) நாகப் பூச்சி
(C) மசரைப் புழு
(D) இவை அனைத்திலும்

93. குழந்தைகளின் – சீத பேதிக்கு இது உகந்த மருந்து

(A) சாதிக்காய் எண்ணெய்
(B) ஆமை யோட்டுக் கற்கம்
(C) சீரகக் கற்கம்
(D) தாழைச் சாறு

94. இலிங்கப் புற்று, யோனிப் புற்று உண்டாக்கும் கரப்பான் நோய் எது?

(A) பொரி கரப்பான்

(B) அழற் கரப்பான்

(C) ஐய கரப்பான்

(D) அரி கரப்பான்

95. சூலில் 28 வது வாரம் மகவின் எடை இவ்வளவாக இருக்கும்

(A) 1000 கிராம்

(B) 1300 கிராம்

(C) 1200 கிராம்

(D) 1100 கிராம்

96. சினைப் பைகளின் சராசரி அளவாக ஒவ்வொன்றும் கீழ் கண்டவாறு இருக்கும்

(A) 3 × 2 × 1 செ.மீ

(B) 1 × 1 × 1 செ.மீ

(C) 1 × 2 × 3 செ.மீ

(D) 2 × 2 × 3 செ.மீ

97. கருவின் எத்தனாவது வாரத்தில் மூளையும் கசேரு கொடியும் காணலாம்

(A) 8 வாரம் (எட்டாம் வாரம்)

(B) 10 வாரம் (பத்தாவது வாரம்)

(C) 4 ம் வாரம் (நான்காவது வாரம்)

(D) 6 ம் வாரம் (ஆறாவது வாரம்)



www.tnpscwinners.com

98. பட்டியல் I–ஐ பட்டியல் II–ல் சரியாகப் பொருத்தி கொடுக்கப்பட்ட குறியீடுகள் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | நித்த சங்காரம் | 1. | திருவருள் நோக்கம் |
| (b) | சுத்த சங்காரம் | 2. | பாழ்நிலை |
| (c) | உய்த்த சங்காரம் | 3. | தொழிலற்ற ஒடுக்கம் |
| (d) | வாழாச் சங்காரம் | 4. | நாளொழுக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

99. மருத்துவக் கலைக்கு தொடர்புடைய சித்தாந்தத்திற்கு உதவும் வாதம் யாது?

(A) சத்காரிய வாதம்
(B) விவர்த்த வாதம்
(C) ஏகான்ம வாதம்
(D) சுநேகாந்த வாதம்

100. கீழ்கண்டவாக்கியங்களை கவனி

கூற்று A : விந்சின பிராரத்தத்தின் வினையனுபவித்துத் தீரும்

காரணம் R : ஆகவே சித்தர் பதினென்பரும் மேற்கூறிய முறையில் வாழ்ந்து கழித்தனர்

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால் (R) சரி

101. 96 தத்துவங்களில் “மாச்சரியம்” என்பதன் பொருள் தோற்றக் கிரமத்தில் எவ்வாறு கூறப்படுகிறது?

(A) பிரியம்
(B) உட்பகை
(C) பிணக்கு
(D) இகழ்தல்

www.tnpscwinners.com

102. பிரபையுள்ள பொருளிலிருந்து புறப்படும் வெளிச்ச கிரணங்கள் நான்கு திசையும் சிதறிச் செல்லும் தன்மைக்கு என்ன பெயர்?

(A) மாத்தியம்
(B) உட்குதல்
(C) விகமம்
(D) சுவாசித்தல்

103. அழுகணி சித்தர் மனம் புழுங்கி இயற்றிய பாடல்களில் இல்லாதது இவற்றுள் எது?

(A) முனைப்பு
(B) அறிவு கூர்மை
(C) கீழ்த்தர வேட்கை
(D) மிடி

104. அசுர மருத்துவத்தின் வகைகளில் அடங்கும் உட்பிரிவுகள் மொத்தம் எத்தனை?

(A) 13
(B) 25
(C) 28
(D) 33

105. ஃபில்மரோன் என்ற வேதிப்பொருள் தரும் தாவரம்

(A) பார்மீலியா
(B) கிராசிலேரியா
(C) டிரையாப்டரிஸ்
(D) ஆக்டினாப்டரிஸ்

106. 'யுட்ரிகிள்' எனப்படுவது ஒரு வகை

(A) மலர்
(B) மஞ்சரி
(C) கனி
(D) விதை

107. சூல்காம்பு வளைந்து கொக்கி போன்று காணப்படுவது

(A) வெர்பினேசி குடும்பத்தில்
(B) லாமியேசி குடும்பத்தில்
(C) அக்காந்தேசி குடும்பத்தில்
(D) கன்வால்வுலேசி குடும்பத்தில்

108. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு

1. சிற்றினப் பெயரைத் தனியாகக் குறிப்பிடலாம்
2. சிற்றினப் பெயரைத் தனியாகக் குறிப்பிட இயலாது
3. பேரினப் பெயரைத் தனியாகக் குறிப்பிடலாம்
4. பேரினப் பெயரைத் தனியாகக் குறிப்பிட இயலாது

(A) 1, 2 & 3 சரியான கூற்றுகள்
(B) 2, 3 & 4 சரியான கூற்றுகள்
(C) 2 & 3 சரியான கூற்றுகள்
(D) 2 & 4 சரியான கூற்றுகள்

109. ஹீமோஃபீலியா A, கீழுள்ள இரத்த உறைதல் காரணிகள் ஒன்றின் குறைவால் வருவது

(A) X
(B) V
(C) VIII
(D) II

110. கீழுள்ளவற்றில் ஒரு பாலிசாக்கரைடு பீட்டா – கிளைகோசைடிக் பிணைப்புகளால் உருவாக்கப்பட்டது

(A) ஸ்டார்ச்
(B) கிளைகோஜென்
(C) டெக்ஸ்ட்ரின்
(D) செல்லுலோஸ்

111. செல்களின் வெளிதிரவங்களில் அதிகபட்சமாக உள்ள நேர் மின் அயனி

(A) $Cl^-$
(B) $HCO_3^-$
(C) $H\,PO_4^{2-}$
(D) புரதம்

112. பாலில் இந்த தாதுப் பொருள் குறைவாக இருக்கிறது

(A) கால்சியம்
(B) சோடியம்
(C) இரும்பு
(D) பொட்டாசியம்

113. கீழ் கண்ட பல சர்க்கரை β கிளைகோசைடிக் தொகுதியால் ஆனது

(A) ஸ்டார்ச்
(B) இன்னுலின்
(C) கிளைகோஜன்
(D) செல்லுலோஸ்

www.tnpscwinners.com

114. விக்கலைப் போக்குவதில் சிறந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ள ஊறல் நீர் எது?

(A) கடுகு
(B) சீரகம்
(C) திப்பிலி
(D) கடுகு ரோகிணி

115. ஆமணக்கு என்னும் செடியின் வேறு பெயர்களில் ஒன்று எது?

(A) மோசம்
(B) தலரூபம்
(C) சித்ரகம்
(D) உபகுஞ்சிகை

116. கடுக்காயை எதனுடன் சேர்த்துண்ண ஐய நோய்கள் போகும்?

(A) வெல்லம்
(B) உப்பு
(C) சர்க்கரை
(D) நெய்

117. 'கவலை' என்பது எந்த மரத்தின் வேறு பெயர்?

(A) அரசு
(B) வேம்பு
(C) அகத்தி
(D) குருக்கத்தி

118. 'நரம்புச் சிலந்தியை' குணமாக்கும் வல்லமை உள்ள மூலிகையினைக் குறிப்பிடு

(A) அவுரி
(B) ஈச்சுர மூலி
(C) ஓரிதழ் தாமரை
(D) கடுகு ரோகிணி

119. முதுவேனில் பருவத்தில் ரசாயனமாக கருக்காயைச் சாப்பிடும் பொழுது எதனுடன் சேர்த்துண்ண, அப்பருவத்தால் ஏற்படும் நோய்கள் நீங்கும்?

(A) இந்துப்பு
(B) வெல்லம்
(C) சர்க்கரை
(D) தேன்

120. தேரன் முறைப்படி செய்த ரசப் பற்பத்திற்கு அளவு யாது?

(A) கடுகில்அரை பாகம் உத்தமம்

(B) மிளகின் $3/4$ பாகம் உத்தமம்

(C) துவரையின் $\frac{3}{12}$ பாகம் உத்தமம்

(D) அரிசியின் $1/4$ பாகம் உத்தமம்

121. பஞ்ச பூத உபரசத்தில் ''சாளிக் கிராமம்'' எந்த பூதத்தின் தன்மை உடையது?

(A) ஆகாயம்

(B) வாயு

(C) தேயு

(D) அப்பு

122. 'உரைஞ்சியம்' என்பது இதன் மற்றொரு பெயராகும்

(A) கற்பூர சிலாசத்து

(B) கோமூத்திர சிலாசத்து

(C) பச்சைக் கல்நார்

(D) வெள்ளைக் கல்நார்

123. ''பாந்தள் வாயின் தேரையென்னப் பாறு மிளகு கொள்முனே''

– என்று உயர்வாகக் கூறப்படும் மருந்து

(A) அய பிருங்கராஜ பாணிதம்

(B) இரசத் தைலம்

(C) உப்பு பற்பம்

(D) சாதி சம்பீரக் குழம்பு

124. ''பறிமித்துரு'' என்பது கீழ்கண்டவற்றுள் எந்தப்பொருளுக்கு வேறு பெயர்?

(A) தங்கம்

(B) மண்டூரம்

(C) தாளகம்

(D) வீரம்

125. செம்பு சேர்ந்த கண் மாத்திரைகளை எவ்வளவு காலம் பழகவைத்துப் பயன்படுத்த வேண்டும் என்று குணபாடம் தாதுஜீவ வகுப்பு நூல் கூறுகிறது

(A) பனிரெண்டு மாதம்

(B) பனிரெண்டு வாரம்

(C) பனிரெண்டு ஆண்டுகள்

(D) பனிரெண்டு நாட்கள்

www.tnpscwinners.com

126. வெள்ளாட்டுப் பித்தப்பையில் எவற்றைவிட்டு, வாய்பாகத்தைக் கயிற்றால் கட்டி சுருக்குக் கொடுக்கக் கட்டாகும்?

(A) பூரக்கட்டு
(B) இலிங்கக் கட்டு
(C) வீரக்கட்டு
(D) இரசக்கட்டு

127. வெள்ளாட்டு மூத்திரத்தை வெதுப்பி, வடிகட்டி ஒன்றுமுதல் ஒன்றரை அவுன்ஸ் வீதம் தசமூலக் குடிநீரில் கொடுக்க எந்த நோய் குணமாகும்?

(A) காக்கைவளை
(B) மகோதரம்
(C) அதிதூலநோய்
(D) காமாலை நோய்

128. எந்தத் தேன் எவ்வகை நோயைப் போக்கும் என்பதைப் பொருத்துக

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | மலைத்தேன் | 1. | அதிதூலம் |
| (b) | மரப்பொந்துத் தேன் | 2. | நேத்திர விரணம் |
| (c) | மனைத் தேன் | 3. | நற்தொனி உண்டாகும் |
| (d) | கொம்புத் தேன் | 4. | உளைமாந்தை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

129. எதன் இரத்தத்தைக் கழுதைப்பாலில் கலந்து கொடுக்க கருங்கிரந்தி நீங்கும்?

(A) உடும்பு இரத்தம்
(B) மயில் இரத்தம்
(C) ஓணான் இரத்தம்
(D) புலிக் கொழுப்பு

130. உள்ளழலாற்றிச் செய்கை உள்ள மெழுகு எது?

(A) பொன் மெழுகு
(B) நல்ல மெழுகு
(C) தேன் மெழுகு
(D) மஞ்சள் மெழுகு

131. பின்கண்டவற்றுள் எவை நெஞ்சுக்கண்டரை நாடிகளின் கிளைகளில் சேராது?

(A) பரீரிக நாடிகள்
(B) நுங்கி நாடிகள்
(C) அசுக நாடிகள்
(D) கூபகோரு நாடிகள்

132. ஈரலின் குறுக்குக் கமரின் வல அந்தத்திற்கும் குகாநாளக் கமருக்கும் இடையில் உள்ள இதழ் எது?

(A) சதுரிதழ்
(B) இட இதழ்
(C) ஸ்பெகிலிதழ்
(D) நொய்யிதழ்

133. பேசிகளில் மிக நீண்ட பேசி எது?

(A) லதாபி
(B) சப்பணி
(C) மேதனி
(D) வாமி

134. கண்டறை வயிற்றறையில் எந்த வம்சிக்கு இடப்புறமாக வல, இட கூபகோரு நாடிகளாகப் பிரிகிறது?

(A) 3ம் இடுப்பு வம்சி
(B) 5ம் இடுப்பு வம்சி
(C) 4ம் இடுப்பு வம்சி
(D) 2ம் இடுப்பு வம்சி

135. காது மடல் கீழ்காண்பவற்றுள் எதனால் ஆனது?

(A) இழை முருந்து
(B) சுவய முருந்து
(C) ஆனாய முருந்து
(D) இழைவைப்பு

136. போசனத்தை மெல்ல உதவும் பேசி எது?

(A) தமனி
(B) முறுவலி
(C) புறப்பாதவி
(D) லபனி

137. மரம் ஏறுவதற்கு உதவும் பேசி எது?

(A) வென் நீளி
(B) வென் கீழ் தந்துரி
(C) வென் பிரசாரி
(D) வென் மேல் தந்துரி

138. திருமூலர் கூற்றுப்படி அணுவின் தன்மையில் வல்லின மெய்யைதயாத்த அணுவானது எவ்வாறு அழைக்கப்படும்?

(A) ஒரு மலம்

(B) இரு மலம்

(C) மும் மலம்

(D) நான்கு வகை மலங்கள்

139. உடலிலிருந்து உயிர் தோன்றுகின்றது எனக் கருதுவார் யார்?

(A) சாங்கியர்

(B) வைசேடிகர்

(C) சமணர்கள்

(D) உலகாயதர்

140. கூடுதல் நிலுவைக் காற்றின் அளவு எவ்வளவு?

(A) 1000 – 1500 மி.லி.

(B) 1500 – 1800 மி.லி.

(C) 500 மி.லி.

(D) 3 லிட்டர்

141. சுரோத்திரம் என்றழைக்கப்படுவது எது?

(A) கண்

(B) காது

(C) மூக்கு

(D) உடம்பு

142. நிறப்புள்ளிகளை கட்டுப்படுத்தும் சுவலி சத்து எது?

(A) வீதன தூண்டிவி சத்து

(B) முன் சுவலி சத்து

(C) பின் சுவலி சத்து

(D) நடு சுவலி சத்து

143. சுடரச் சுருங்கல் ஒலி நீடிக்கும் காலத்தின் அளவு?

(A) 0.6 விநாடி

(B) 0.12 விநாடி

(C) 0.10 விநாடி

(D) 0.8 விநாடி

144. தசிரங்களின் குருதி அழுத்தம் இதுவாகும்

(A) 9 மி.மீ. இரசம்

(B) 90 மி.மீ. இரசம்

(C) 3 மி.மீ. இரசம்

(D) 10 – 20 மி.மீ. இரசம்

www.tnpscwinners.com

145. மருந்துக்கு ஒப்பான மீன் எது?

(A) பேராரா மீன்
(B) வெள்ளை வௌவால் மீன்
(C) சுதும்பு மீன்
(D) கிழங்கான் மீன்

146. உளுத்தம் பருப்புடன் எதைச் சேர்த்தால் அது விடமாகும்?

(A) கொத்துப்பசலை
(B) முள்ளங்கி
(C) கீரைகள்
(D) மணத்தக்காளி

147. குடல் வாதம் மற்றும் பலவித வாத நோய்களும் உண்டாக்கும் இறைச்சி எது?

(A) பள்ளையாட்டு இறைச்சி
(B) செம்மறியாட்டு இறைச்சி
(C) குறும்பாட்டு இறைச்சி
(D) கொடியாட்டு இறைச்சி

148. எந்த அரிசியை ஏழுதரம் நீரிலிட்டுக் கழுவிய பிறகு பயன்படுத்த வேண்டும்?

(A) கம்பு அரிசி
(B) திணை அரிசி
(C) சாமை அரிசி
(D) வரகு அரிசி

149. இரத்த குன்மத்தைத் தொலைக்கும் நீர் எது?

(A) காவேரி நீர்
(B) வைகை நீர்
(C) தாமிரவருணி நீர்
(D) சிந்து நீர்

150. குடலைப் பற்றிய வாத நோயைப் போக்குவது எது?

(A) வாழைப்பூ
(B) அகத்திப்பூ
(C) தூதுளம்பூ
(D) வெங்காயப்பூ

151. முன்பனிக் காலத்தில் எந்தக் காற்று வீசும்

(A) கீழ்க் காற்றாகிய கொண்டல் வீசும்
(B) தென்கீழ்க் காற்றாகிய உலவை வீசும்
(C) குளிர் காற்று வீசும்
(D) வட காற்றாகிய வாடைக்காற்று வீசும்

152. வளி தன்னிலை வளர்ச்சி, வேற்றுநிலை வளர்ச்சி மற்றும் தன்னிலையடைதல்

(A) கார் காலம், கூதிர் காலம் மற்றும் முன்பனிக் காலம்

(B) பின்பனிக்காலம், இளவேனிற்காலம் மற்றும் முதுவேனிற் காலம்

(C) கூதிர்காலம், பின்பனிக்காலம் மற்றும் இளவேனிற்காலம்

(D) முதுவேனிற்பருவம், கார்காலம் மற்றும் கூதிர்காலம்

153. தேகத்தில் பிருதிவியில் அப்பு கூடும் வயது?

(A) 30 – 40 வயது

(B) 40 – 50 வயது

(C) 50 – 60 வயது

(D) 35 – 45 வயது

154. தீரா நோய் நெய்க்குறிகள்

(A) பாகலிலை, வண்டு, தாமரைமொக்கு

(B) கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், பாம்பு

(C) மலை, குடை, மரம், வெண்சாமரம், சங்கு

(D) மகர தோரணங்கள், பூமி, யானையின் கொம்பு

155. "வயல் தனிலே பூநாக மண்ணைத் தானே

வருந்தியது புத்துப்போ லவத்தை யாகும்

பயல் மொழியீர் தேகத்தில் கிருமி தானே

பரந்துருகி குட்டம்போல் புள்ளி காணும்"

எந்நூலில் கூறப்பட்டுள்ளது.

(A) சதகநாடி

(B) கண்ணுசாமியம்

(C) சிகிச்சாரத்ன தீபம்

(D) குருநாடி

156. அகத்தியர் இரத்தினச் சுருக்கம் நாடியின் பிரகாரம் விப்புருதியை எத்தனை வகையால் பிரித்துள்ளார்கள்

(A) 18

(B) 76

(C) 46

(D) 48

157. வெடிக்கும் பொருட்களை முறைபடுத்த மத்திய அரசால் எந்த ஆண்டு வெடி மருந்து சட்டம் இயற்றப்பட்டது?

(A) 1950
(B) 1884
(C) 1964
(D) 1970

158. இவற்றில் பிணம் அழுகலடைவதை தாமதப்படுத்தும் நஞ்சுகள் யாவை?

(A) சயனைடு, பாஸ்பரஸ்
(B) பாதரசம், காப்பர்
(C) ஆண்டிமணி, வெள்ளைப் பாடாணம்
(D) ஈயம், இரும்பு

159. அமிழ்தலால் ஏற்படும் உயிரிழப்புகளின் முக்கிய காரணம் எது?

(A) கிருக தசைப்பகுதி இறுக்கம் (Laryngeal spasm)
(B) உணர்விழப்பு
(C) நுரையீரல் செயலிழப்பு
(D) மூளை செயலிழப்பு

160. வெடிகுண்டுகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் முக்கிய வேதிப்பொருள் யாது?

(A) கால்சியம், சோடியம்
(B) பொட்டாசியம், ஸிங்க்
(C) பாஸ்பரஸ், மெக்னீசியம்
(D) நைட்ரேட், சல்பேட்

161. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி

I. கூற்று : தழும்பு என்பது நார் இழைத்திசுக்களின் சற்றே அதிக வளர்ச்சி. இதில் வியர்வை கோளங்கள், ரோமங்கள் காணப்படாது.

II. காரணம் : எபிதிலியல் திசுக்கள், நுண்குருதி குழல்கள் அருகிக் காணும்.

(A) I. – உண்மை II. உண்மை
(B) I. தவறு – II. உண்மை
(C) I. தவறு – II. தவறு
(D) I. உண்மை II. தவறு

162. 'குருதிக்கட்டு' காயத்தில், காயம் ஏற்பட்ட இடத்தில் பச்சை நிறம் அடைந்துள்ளது என்றால், அக்காயத்தின் வயது

(A) 24 மணி நேரம்
(B) 3 நாட்கள்
(C) 5 முதல் 6 நாட்கள்
(D) 7 முதல் 12 நாட்கள்

www.tnpscwinners.com

163. காயத்தின் காலத்தை தக்கவாறு பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | சிராய்ப்பில் பொருக்கு காண்பது | 1. | 24 – 48 மணி நேரம் |
| (b) | காயம் சீழ்கொண்டிருந்தால் | 2. | 12 – 24 மணி நேரம் |
| (c) | காயம், சிவந்து, தடித்து இருந்தால் | 3. | 48 மணி நேரத்திற்கு மேல் |
| (d) | காயத்தில் புதுவில வளர்ச்சி | 4. | 5 – 7 நாட்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

164. உருத்தாகச் சன்னிக்கு எத்தனை நாள் கழித்து நோயின் வன்மை குறைந்து முற்றிலும் மருத்துவத்திற்கு அடங்கும்?

(A) ஏழு நாட்கள்
(B) பத்து நாட்கள்
(C) பன்னிரண்டு நாள்
(D) பதினைந்து நாள்

165. அணைய போகும் விளக்கானது, ஒளிவிட்டு எரிந்து அணையுமோ அதுபோல் பேசிக்கொண்டே எமலோகம் அடையக் கூடிய சன்னி நோய் எது?

(A) நஞ்சு சன்னி
(B) சண்ட முப்பிணிச் சன்னி
(C) தீச் சன்னி
(D) சோக சன்னி

166. ஆடல், பாடல் காலங்களில் திடீரென மார்பு நொந்து, தலை கிறு கிறுத்து உயிரே போய்விடுமோ என்ற அச்சத்தினையும், நரம்புத் தளர்ச்சியையும் உண்டாக்கும் தமரக நோய் எது?

(A) வளித் தமரக நோய்
(B) அழல் தமரக நோய்
(C) ஐயத் தமரக நோய்
(D) முக்குற்றத் தமரக நோய்

167. தாமரைக் கொட்டையை தேனிலிழைத்துத் தர எந்த நோய் குணமாகும்?

(A) நீர் வேட்கை
(B) செரியாமை
(C) விக்கல்
(D) வாந்தி

168. காமாலை நோய் போல் தோற்றமளித்து, பித்த நீர் கலந்து வாந்தி, மண்ணீரல் வீக்கம் ஆகிய குறிகுணங்களைக் கொண்டு காணப்படும் மண்ணீரல் நோய் எது?

(A) வளி மண்ணீரல் நோய்
(B) சுழல் மண்ணீரல் நோய்
(C) ஐய மண்ணீரல் நோய்
(D) முக்குற்ற மண்ணீரல் நோய்

169. தமரக நோயில் மார்பு வலி நீங்க பயன்படும் பற்று மருந்தில் சேரும் பயறு வகைகள் யாவை?

(A) பாசிப்பயிறு, மொச்சைப் பயறு
(B) மொச்சை, சிறு பயறு
(C) தட்டை பயறு, துவரம் பயறு
(D) துவரம் பயறு, மொச்சை பயறு

170. வெடியுப்புச் சுண்ணம் – தயாரிப்பில் சேரும் வெடியுப்பின் பிரிவு யாது?

(A) நாலாங் காய்ச்சல் வெடியுப்பு
(B) மூன்றாம் காய்ச்சல் வெடியுப்பு
(C) எட்டாங் காய்ச்சல் வெடியுப்பு
(D) ஏழாம் காய்ச்சல் வெடியுப்பு

171. குடற்படுவன் ஊழி நோய்க்கு சமளாதேவி மாத்திரையை கீழ்கண்டவற்றில் எதில் அனுபானித்து வழங்க வேண்டும்?

(A) மஞ்சள் கலக்கிய தெளி நீர்
(B) புளித்த தயிர் தெளி நீர்
(C) மிளகு குடிநீர்
(D) கஞ்சா குடிநீர்

172. 'நீர் ஊற்று போல் வயிற்றில் தண்ணீர் பெரும்' – குறிகுணம் காணும் பெருவயிறு நோய் எது?

(A) வழுவை பெருவயிறு
(B) நீராம்பல்
(C) ஊராம்பல்
(D) ஐய பெருவயிறு

173. கழிச்சலுக்கான மருந்துகளை அடிக்கடிக் கொடுத்து, உடல் வன்மை குன்றும்படி செய்வதால் உண்டாகும் நோய் கீழ்கண்டவற்றுள் எது?

(A) கல்லடைப்பு
(B) சன்னி நோய்
(C) அட்டிலம்
(D) மண்ணீரல் வீக்கம்

www.tnpscwinners.com

174. பட்டியல் I – ல் குறிப்பிட்டுள்ள நோய்களுக்கு பட்டியல் II – ல் குறிப்பிட்டுள்ள குறிகுணங்களுடன் பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| | நோய் | | குறி குணங்கள் |
| (a) | கிடிபம் | 1. | தோல் வெடித்து ஆறாத புண் |
| (b) | விபாதிகம் | 2. | தொட்டுப் பார்த்தால் எண்ணெய் போல் இருத்தல் |
| (c) | தேத்துரு | 3. | உடம்பு பச்சை நிறமாகும் |
| (d) | விசர்ச்சிகம் | 4. | தோலில் சிவப்பு நிற வட்டங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

175. குறி உள்ளே இழுத்துக் கொள்ளும் பிரமை எது?

(A) வாத பிரமை
(B) கப பிரமை
(C) பித்த பிரமை
(D) எதுவுமில்லை

176. விலங்குகளின் பிச்சுக்களால் ஆன நசியம் எந்த நோயில் பயன்படும்?

(A) உன்மாதம்
(B) வலிப்பு
(C) அபஸ்மாரம்
(D) மூர்ச்சை

177. ஆலகால விடத்தைலம் எந்த நோய்க்கு பயன்படுத்தலாம்?

(A) மயக்க நோய்
(B) மூர்ச்சை நோய்
(C) ஐயமத அழிவு
(D) முக்குற்ற மயக்கம்

178. பெரு நோய் தீரும் ஆசனம் எவை?

(A) தனுராசனம்
(B) சர்வாங்காசனம்
(C) சலபாசனம்
(D) சக்கராசனம்

179. கண்ணில் உண்டாகும் பித்த நீரை நீக்கும் கற்பம் எது?

(A) கரிசாலை
(B) குப்பைமேனி
(C) தூதுவேளை
(D) வள்ளைக் கொடி

180. பிராணாயாமத்தை தினமும் செய்யின் எத்தனை திங்களில் நாடிகள் சுத்தியாகும்?

(A) 3 திங்கள்
(B) 2 திங்கள்
(C) 4 திங்கள்
(D) 6 திங்கள்

181. அடிபட்ட வீக்கம் கீழ்கண்டவற்றில் எந்த வீக்கத்தை ஒத்திருக்கும்?

(A) வளி வீக்கம்
(B) அழல் வீக்கம்
(C) ஐய வீக்கம்
(D) இருகுற்ற கலப்பு வீக்கம்

182. யானைக்கால் நோய்க்கு கோழிமுட்டை வெண்கரு விட்டரைத்து போடப்படும் பற்று மருத்துவத்தில் கீழ்கண்டவற்றில் எந்த சரக்கு சேராது?

(A) கழற்சிகாய் பொடி
(B) புற்றுமண்
(C) செம்மண்
(D) காந்தக் கல்

183. பெரு நோய்க்கு நேர் மருந்தாக சொல்லப்பட்டிருக்கும் மருந்து எது?

(A) சிவனார் வேம்பு குழித்தைலம்
(B) இரசத்தைலம்
(C) ஊழலாற்றித் தைலம்
(D) கந்தக அடார்த் தைலம்

184. உடலில் காயம் பட்டவர்களுக்கு நெய்க்கிழி வைத்தல் பற்றி விளக்கும் நூல் எது?

(A) கம்பராமாயணம்
(B) சீவகசிந்தாமணி
(C) திருவள்ளுவ மாலை
(D) குண்டலகேசி

185. கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்துப் பூசுவதால் தீரும் குட்ட நோய் எது?

(A) சொறிக் குட்டம்
(B) மண்டலக் குட்டம்
(C) யானைத் தோல் குட்டம்
(D) பன்றித் தோல் குட்டம்

186. குடற்பில்லம் என்னும் கண்நோய்க்கு தலைமுழுக் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள மருந்து எது?

(A) மிளகுத்தைலம்
(B) நவாச்சாரக் குழம்பு
(C) சுக்குத் தைலம்
(D) அஞ்சனப்பொடி

187. இந்திர வில்லைப்போல் பல வண்ணங்கள் தோன்றிய பார்வை உள்ள நோய் எது?

(A) நாக படலம்
(B) கரு நாக படலம்
(C) பகவிழி படலம்
(D) அதிமாங்கிஷப்படலம்

188. கீழ்கண்டவாக்கியங்களை கவனி

கூற்று (A) : குற்றங்கள் குட்ட நோயில் முதன் முதலில் குருதியையும் இரண்டாவதாகச் சதையையும் தாக்கிப் பின்னர் தோலின் வழியாக வெளிப்படும்

காரணம் (R) : குட்டநோய் வளி அழல் மாறுபாட்டால் உண்டாவது

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி
(B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால் (R) சரி

189. பட்டியல் I ல் உள்ள நோய்களை பட்டியல் II புகைகளுடன் சரியாக பொருத்தி, கீழ்க்குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் விடையைத் தேர்வு செய்க

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| | நோய்கள் | | புகைகள் |
| (a) | மூர்ச்சை | 1. | அகத்தியர் குழம்பு புகை |
| (b) | குழந்தைகளின் இசிவு | 2. | சாம்பிராணிப் புகை |
| (c) | பற்புழு | 3. | குதிரை குழம்பு புகை |
| (d) | தலை பாரம் | 4. | கண்டங்கத்தரிவிதைப்புகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

190. வணங்காமுடி தோற்றம் எந்த உதய நிலை மகப்பேற்றில் ஏற்படும்?

(A) பின் பிடரி உதய நிலை மகப்பேறு
(B) இரட்டை குழவி சூல்
(C) புட்ட உதயம்
(D) மகவின் குறுக்கு கிடக்கை

191. கீழ்க்கண்டவற்றை சரியான முறையில் பொருத்துக

(a) வலியோன் — 1. யோனித் துவாரம் குவிக்கவும் விரிக்கவும் இயலாமை
(b) குருதிச்சீழ் யோனி — 2. புணர்ச்சியில் வலி
(c) சூலை யோனி — 3. சளிச்சவ்வு கவசம் சுருங்கல்
(d) சுட்க யோனி — 4. கருப்பைக்கும் தாபிதம் பரவும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

192. பூப்படைந்தது முதல் பூப்பு முடிவு வரை உண்டாகும் பெரும்பாடு எது?

(A) சாதாரண பெரும்பாடு
(B) அபரி மித பெரும்பாடு
(C) ஒழுங்கற்ற பெரும்பாடு
(D) முடிவு பூப்பு வயதில் ஏற்படும் பெரும்பாடு

193. எந்த பிரிவு சூதகவலியில் குடக்கி முடக்கி மேல் எழும்பி வலிக்கும்?

(A) அக சூதகவலி
(B) இறுதி சுருங்கும் சூதகவலி
(C) சஞ்சித சூதகவலி
(D) புற சூதகவலி

194. தடிப்புறும் காலம் என்பது

(A) 15 ம் நாளிலிருந்து மறு பூப்பு வரை
(B) முதல் இரண்டொரு நாட்கள்
(C) பூப்படைந்த நாளில் இருந்து 15 நாள்
(D) நான்கு (அ) ஐந்து நாட்கள்

www.tnpscwinners.com

195. கீல்களில் வீக்கம் கண்டு நீட்டவும், மடக்கவும் முடியாமல் நரம்பு மண்டலம் முற்றும் வலிக்கும் கரப்பான் நோய் பிரிவு எது?

(A) கருங்கரப்பான்

(B) செங்கரப்பான்

(C) சட்டை கரப்பான்

(D) ஓடு கரப்பான்

196. தெற்கத்திக் கணத்திற்கு தரவேண்டிய மருந்து இதுவாகும்

(A) பழத்தெண்ணெய்

(B) கோடா சுழித் தைலம்

(C) காரை ரசாயனம்

(D) செப்பு நெருஞ்சி எண்ணெய்

197. "கணமது பண்ணிரண்டாண்டு அதிகமாம்
அந்நாள் மட்டும் ஆம் இது நோயின் காலம்" — எது?

(A) ஊது கணம்

(B) ஊது மாந்த கணம்

(C) ஊது கண மாந்தம்

(D) சுழி கணம்

198. சதை, தோல், எலும்பு, நரம்பு இவைகளை வெதுப்பி, உடலையும் உருக்கும் மாந்த நோய் எது?

(A) முக்கு மாந்தம்

(B) சந்நி மாந்தம்

(C) தலை மாந்தம்

(D) ஊது மாந்தம்

199. மாந்தத்திற்கு கூறப்பட்டுள்ள "பூர மாத்திரை" செய்முறையை விளக்கும் நூல் இது

(A) பரராசசேகர பால ரோக நிதானம்

(B) சித்த வைத்திய திரட்டு

(C) சிமிட்டு ரத்தினச் சுருக்கம்

(D) சபாபதி வைத்திய சிந்தாமணி

200. கண் பச்சை நிறமடையும் தன்மையுள்ள காமாலை நோய் எது?

(A) ஊது காமாலை

(B) மஞ்சட் காமாலை

(C) வரள் காமாலை

(D) ஐய காமாலை

www.tnpscwinners.com

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

www.tnpscwinners.com

## SPACE FOR ROUGH WORK

SEAL

www.tnpscwinners.com